

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.1.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், 2024–ஆம் ஆண்டிற்கான அண்ணல் அம்பேத்கர் விருது அறிவிக்கப்பட்டமைக்காக சந்தித்து நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ்.பாலாஜி, ஜெ.முகம்மது ஷா நவாஸ், எம்.பாபு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிய, பணி நியமன ஆணைகள் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நேற்று முன்தினம் (6.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி எஸ். மதுமதி ஆகியோர் உடன் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் அத்துமீறிய ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து –

# கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் திரண்டு முழக்கமிட்டனர்!

கரூர், ஜன. 8 –

கரூரில் மாவட்ட கழகம் சார்பில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி ஆளுநரின் அத்துமீறிய செயல்களையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழிகாட்டுதலில், கரூர் மாவட்ட திமுக சார்பில், தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும், அவருக்கு துணை போகும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியையும் கண்டித்து கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ் பாபு, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி கழக பொதுக் குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ். மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் என். செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர், தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து

சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு அத்துமீறும் ஆளுநர் ரவி எடப்பாடி பாஜக கள்ளக் கூட்டணி செயல்களைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

### ஆளுநர் தனது உரையை வாசித்து ஜனநாயகக் கடமை ஆற்றி இருக்க வேண்டும்!

# மரபுப்படிதான் சட்டமன்றத்தை நடத்த முடியும்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி



**சென்னை, ஜன. 8 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவையை அதன் மரபுப்படித்தான் நடத்த முடியும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

சட்டமன்றம் நாளை (7 ஆம் தேதி) கூடியதும் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவையின் அன்றைய நிகழ்ச்சிகள் அத்துடன் ஒத்தி வைக்கப்படும்.

அதைத் தொடர்ந்து 8 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை 4 நாட்கள் சட்டமன்றம் நடைபெறும். முதல் 3 நாட்கள் வினா - விடைகள் இடம் பெறும். 11 ஆம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுவார்.

அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்துக்கு அ.தி.மு.க. வினர் சட்டமன்றத்திற்குள் பதாகைகளுடன் வந்திருந்தனர்.

ஆளுநர் பேச எழுந்தபோதுதான் அ.தி.மு.க.வினர் பதாகைகளை காட்டி முழக்கமிட்டனர். பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையில் ஆளுநருக்கு எதிராக அ.தி.மு.க.வினர் பதாகைகளை காண்பித்தார்களா என்று தெரியவில்லை. அ.தி.மு.க.வினருக்கு இன்றைக்கு பேச வாய்ப்பில்லை என்பதால், அவர்கள் யாருக்கு எதிர்ப்பு தெரிவித்து பதாகைகள் காண்பித்து எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்றும் தெரியவில்லை.

அவைக்குத் குந்தகம் விளைவித்து கலவரச் சூழலை உருவாக்கிய காரணத்தால், அ.தி.மு.க. வினரை வெளியேற்றிட வேண்டியதாயிற்று.

அரசமைப்பு விதி எண் 176 (1)ன்படி ஆளுநர் தனது உரையை வாசித்து ஜனநாயகக் கடமை ஆற்றி இருக்க வேண்டும். ஆனால் மரபின்படியும் அவர் உரையாற்றாமல் சென்று விட்டார்.

ஆந்திர மாநில சட்டப்பேரவையில், ஆளுநரை அழைக்காமல் கூட்டம் நடத்தியது உங்களுக்குத் தெரியும். ஆனால் தமிழ்நாட்டில் ஆண்டின் முதல் கூட்டத்தை ஆளுநரை அழைத்து தான் நடத்த வேண்டும் என்ற மரபு தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. சட்டமன்ற மரபுகளை மாற்ற முடியாது. அது தொடரும்.

சென்னாரெட்டி ஆளுநராக இருந்த போது, சட்டப்பேரவையில் அவர் உரை நிகழ்த்திய போது அவரை மாற்ற வேண்டும் என்று அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா தீர்மானம் போட்டது நினைவிருக்கும்.

ஆளுநர் வரும்போதே சட்டப்பேரவையில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்றால் மரபை எப்படி மாற்ற முடியும்?

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேட்டியளித்தார்.

